ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2349/42 - 2023 සැප්තැම්බර් මස 16 වැනි සෙනසුරාදා - 2023.09.16
*2349/42 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி.- 277/40*(iv)

***(188 ஆம் அத்தியாயமான) புராதனப்பொருட்கள் கட்டளைச்சட்டம்***

***16 ஆம் பிரிவின் கீழான கட்டளை***

*(188 ஆம் அத்தியாயமான) புராதனப்பொருட்கள் கட்டளைச்சட்டத்தின் 16 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நினைவுச்சின்னங்கள் புராதன நினைவுச்சின்னங்களாகக் கருதப்படுதல் வெண்டுமென இக்கட்டளைமூலம் வெளிப்படுத்துகின்றேன்.*

**விதுர விக்ரமநாயக்க,**
*புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்.*

கொழும்பு,
*2023, ஓகத்து 11.*

***அட்டவணை***

***பாதுகாக்கப்பட்ட புராதன நினைவுச்சின்னங்களாக வெளிப்படுத்தப்படும் சின்னங்கள்***

*1. சப்பிரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிட்ட பிரதேச செயலாளர் பிரிவில் இல 155 கிராம அலுவலர் பிரிவிலுள்ள குருவிட்ட நகர மத்தியில் அமைந்துள்ள பழைய புகையிரத கட்டுப்பாட்டுக் கட்டிடம் மற்றும் பழைய புகையிரத விடுதிக் கட்டிடம் (வடக்கு அகலாங்கு 6°65'15''* N *மற்றும் கிழக்கு நெட்டாங்கு 80° 22' 015''*E)

1A - G 40326 — 07 (2023/09)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் லுனுகம்வெகர பிரதேச செயலாளர் பிரிவில் எல்லகல கிராம அலுவலர் பிரிவுக்குச் சொந்தமான அஞ்சலீகல தொல்பொருள் இடத்தில் அமைந்துள்ள இடிபாடுள்ள கட்டிடம், மூன்று கல்வெட்டுக்கள் மற்றும் ஏனைய புராதன கட்டுமானங்களின் இடிபாடுகள் மற்றும் பழைய தூபி மற்றும் அதனைச் சூழவுள்ள 100 மீட்டர் நிலமனை (வடக்கு அகலாங்கு 6° 32' 290" N மற்றும் கிழக்கு நெட்டாங்கு 81° 24' 252"E)

3. தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் திஸ்ஸமகாராம பிரதேச செயலாளர் பிரிவில் கிரிந்த இல 19 கிராம அலுவலர் பிரிவிலுள்ள கிரிந்த தலதா விகாரை பூமியில் உள்ள இடிபாடுள்ள கட்டிடம், பழைய தூபி மற்றும் அங்கிருந்து 100 மீட்டர் நிலமனை (வடக்கு அகலாங்கு 6° 22' 077" N மற்றும் கிழக்கு நெட்டாங்கு 81° 33' 133"E )

4. தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் திஸ்ஸமகாராம பிரதேச செயலாளர் பிரிவில் புனித நகரம் இல 08 கிராம அலுவலர் பிரவிற்குரிய திஸ்ஸமகாராம சீலாபஸ்ஸ பிரிவெனா விகாரை பூமியில் உள்ள சீலாபஸ்ஸ பிரிவெனாக் கட்டிடம் மற்றும் அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலமனையும் (வடக்கு அகலாங்கு 6° 27' 64" N மற்றும் கிழக்கு நெட்டாங்கு 81° 29' 05"E ) அந்தப் பிரிவெனாவுக்குச் சொந்தமான திஸ்ஸ மகா வித்தியாலய பூமியிலுள்ள பழைய இடிபாடுள்ள கட்டிடம் மற்றும் அதனை சூழவுள்ள 50 மீட்டர் நிலமனை (வடக்கு அகலாங்கு 6° 27' 644" N மற்றும் கிழக்கு நெட்டாங்கு 81° 29' 090"E )

5. தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் தெவிநுவர பிரதேச செயலாளர் பிரிவின் தெவிநுவர தெற்கு கிராம அலுவலர் பிரிவுக்குச் சொந்தமான தெவிநுவர கிராமத்தில் கலங்கரை விளக்கு வீதியிலுள்ள தெய்வேந்திர முனைக்கு அண்மையிலுள்ள கலங்கரை விளக்கு (வடக்கு அகலாங்கு 5° 55' 275" N மற்றும் கிழக்கு நெட்டாங்கு 80° 35' 645"E )

6. தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தில் நியாகம பிரதேச செயலாளர் பிரிவில் கரவ்வ 30 D கிராம அலுவலர் பிரிவிலுள்ள கரவ்வ கிராமத்தில் அமைந்துள்ள கரவ்வ அம்பலம் மற்றும் அதற்குச் சொந்தமான 0.28 பேர்சஸ் நிலமனை (வடக்கு அகலாங்கு 6° 20' 5254" N மற்றும் கிழக்கு நெட்டாங்கு 80° 14' 109"E )

7. தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் மாத்தறை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் கடைவீதி தெற்கு இல.417 B கிராம அலுவலர் பிரிவிலுள்ள மாத்தறை பொலிஸ் நிலையம் இயங்கிவரும் பழைய கட்டிடம் மற்றும் பழைய குதிரை இலாயக் கட்டிடம் (வடக்கு அகலாங்கு 6° 20' 5254" N மற்றும் கிழக்கு நெட்டாங்கு 80° 14' 109"E )

8. தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் கம்புறுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் கம்புறுபிட்டிய கிராம அலுவலர் பிரிவிலுள்ள கம்புறுபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள கம்புறுபிட்டிய முற்சந்தியில் வடக்குத் திசையில் பாடசாலை வீதியையும் தெற்குத் திசையில் துணை வீதியையும் மேற்குத் திசையில் கம்புறுபிட்டிய - தெய்யந்தர வீதியையும் கிழக்குத் திசையில் தனியார் காணிகளையும் எல்லையாகக் கொண்ட நிலமனை மற்றும் அதனுள் அமைந்துள்ள பழைய அம்பலம் (வடக்கு அகலாங்கு 6° 48' 13" N மற்றும் கிழக்கு நெட்டாங்கு 80° 33' 983"E)

9. வட மத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்தில் நொச்சியாகம பிரதேச செயலாளர் பிரிவில் எஹுட்டுவாகம இல 326 கிராம அலுவலர் பிரிவிலுள்ள ரம்பவெவ கிராமத்திலுள்ள எத்பந்திய குளத்திற்கு வடமேற்குத் திசையில் அமைந்துள்ள டெம்பிட்ட கட்டிடம் (வடக்கு அகலாங்கு 8° 32' 0313" N மற்றும் கிழக்கு நெட்டாங்கு 80° 18' 9935"E ) மற்றும் அதனைச் சூழ 20 மீட்டர் நிலமனை.

10. வட மத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்தில் நொச்சியாகம பிரதேச செயலாளர் பிரிவில் எஹுட்டுவாகம இல 326 கிராம அலுவலர் பிரிவிலுள்ள ரம்பவெவ கிராமத்திலுள்ள கோன்கஸ்திகிலிய குளக்கட்டுக்கு 50 மீட்டர் அளவு கிழக்குத் திசையில் அமைந்துள்ள டெம்பிட்ட கட்டிடம் மற்றும் தாதுகோபுரக் கட்டிடத்துடன் கூடிய நினைவுச் சின்னங்களைச் சுற்றியுள்ள 20 மீட்டர் நிலமனை.

11. வட மத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்தில் நொச்சியாகம பிரதேச செயலாளர் பிரிவில் எஹுட்டுவாகம இல 326 கிராம அலுவலர் பிரிவிலுள்ள ரம்பவெவ கிராமத்தில் அமைந்துள்ள குடாவெவ குளத்தின் ஒதுக்குக் காட்டுக்கு கிழக்குத் திசையில் அமைந்துள்ள டெம்பிட்ட கட்டிடம் (வடக்கு அகலாங்கு 8° 33' 0288" N மற்றும் கிழக்கு நெட்டாங்கு 80° 12' 8972"E ) மற்றும் அதனைச் சுற்றியுள்ள 20 மீட்டர் நிலமனை.

12. வட மத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்தில் நொச்சியாகம பிரதேச செயலாளர் பிரிவில் ரலபனாவகம இல.338 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள ரலபனாவ கிராமத்திற்குரிய திவுல்கஹவெவ சேனைவெளி என அழைக்கப்படும் காணியிலுள்ள கல்படிக்கட்டுக்களுடன் கூடிய கல்வேலி (வடக்கு அகலாங்கு 8° 30' 0436" N மற்றும் கிழக்கு நெட்டாங்கு 80° 23' 375"E)

13. வட மத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்தில் கல்நேவ பிரதேச செயலாளர் பிரிவில் மூஸ்னவ இல. 473 கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஹெலம்பேவ கிராமத்தில் அமைந்துள்ள ஆசிரிகம மெகலிதிக் மயான பூமி (வடக்கு அகலாங்கு 8° 01' 208" N மற்றும் கிழக்கு நெட்டாங்கு 80° 46' 675"E)

14. மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தில் வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில் ஹேகித்த இல.169 கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஹேகித்த கிராமத்தில் அமைந்துள்ள ஹெந்தலை தொழுநோய் வைத்தியசாலை பூமியிலுள்ள பழைய கட்டிடங்கள் 07 மற்றும் அந்த ஒவ்வொரு கட்டிடத்தையும் சூழ 15 அடி நிலமனை (வடக்கு அகலாங்கு 6° 58' 55.9" N மற்றும் கிழக்கு நெட்டாங்கு 79° 52' 33.8"E )

15. மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தில் பியகம பிரதேச செயலாளர் பிரிவில் பமுனுவில இல. 265 கிராம அலுவலர் பிரிவிலுள்ள பமுனுவில கிராமத்தின் கல்பொத்த தெனிமுல்ல மாவத்தையில் அமைந்துள்ள கல்லினாலான நடைப் பாலத்திற்கு பயன்படுத்தியுள்ள ஐந்து கற் தூண்கள் மற்றும் அதனைச் சூழ நாற்புறமும் 5 மீட்டர் நிலமனை (வடக்கு அகலாங்கு 6° 57' 54.8" N மற்றும் கிழக்கு நெட்டாங்கு 79° 56' 17.8"E )

16. மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் கடுவளை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 489 போரே கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள அம்பலம், பழைய கிணறு மற்றும் அதனைச் சூழ கிழக்குத் திசையில் 10 அடியும் மேற்குத் திசையில் 5 அடியும் வடக்கு மற்றும் தெற்கு திசைகளில் வீதியையும் எல்லைகளாகக் கொண்ட நிலமனை (வடக்கு அகலாங்கு 6° 52' 54" N மற்றும் கிழக்கு நெட்டாங்கு 79° 58' 59"E).

17. ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் கந்தகெட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் கிவுலெகெதர கிராம அலுவலர் பிரிவிலுள்ள கிவுலெகெதர கிராமத்தின் பழைய கமேவெல வயல்வெளியில் அமைந்துள்ள கிவுலெகெதர மொஹட்டால பழைய தேவாலயம் மற்றும் அதன் நாற்புறத்திலும் 05 மீட்டர் அளவிலான நிலமனை (வடக்கு அகலாங்கு 7° 08' 35" N மற்றும் கிழக்கு நெட்டாங்கு 80° 59' 50"E)

18. வடமேல் மாகாணத்தின் குருணாகல் மாவட்டத்தில் நாரம்மலை பிரதேச செயலாளர் பிரிவில் தம்பதெனிய வடக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள தம்பதெனிய கிராமத்தின் வடுவாகெடுகல எனும் பெயர் கொண்டு அழைக்கப்படும் தொல்பொருள் காரணிகளைக் கொண்ட கற்பாறையுடன் கூடிய பின்வரும் பூகோளத் தரவு முறையெண்களினால் வேறாக்கப்பட்ட நிலமனை.

| வடக்கு அகலாங்கு | கிழக்கு நெட்டாங்கு |
|---|---|
| 7° 22' 22.61" N | 80° 8' 52.83" E |
| 7° 22' 20.80" N | 80° 8' 56.05" E |
| 7° 22' 17.48" N | 80° 8' 57.36" E |
| 7° 22' 15.23" N | 80° 8' 55.39" E |
| 7° 22' 18.30" N | 80° 8' 50.48" E |

19. வடமேல் மாகாணத்தின் குருணாகல் மாவட்டத்தில் கிரிபாவ பிரதேச செயலாளர் பிரிவில் ஒருகல கிராம அலுவலர் பிரிவிலுள்ள ராஜாங்கனய நீர்த்தேக்கம் கிராமத்திலுள்ள ராஜாங்கனய நீர்த்தேக்கத்தின் குளக்கட்டு மற்றும் கீழ் பிரதேசத்திலுள்ள பின்வரும் பூகோளத் தரவு முறையெண்களினால் வேறாக்கப்பட்ட நிலமனை மற்றும் அதனுள் காணப்படும் பழைய தூபிக் கல்லறை, இடிபாடுள்ள கட்டிட எச்சங்கள், விழுக்கு செதுக்கப்பட்ட 02 குகைகள், கல்லில் செதுக்கப்பட்ட படிக்கட்டுகள் மற்றும் மலையின் மீது அமைந்துள்ள பழைய தூபியுடன் கூடிய காடிகல தொல்பொருள் இடம்.

| வடக்கு அகலாங்கு | கிழக்கு நெட்டாங்கு |
|---|---|
| $8^0$ 8' 29.46"N | $80^0$ 13' 19.55" E |
| $8^0$ 8' 24.04"N | $80^0$ 13' 25.38" E |
| $8^0$ 8' 18.51"N | $80^0$ 13' 23.01" E |
| $8^0$ 8' 22.35"N | $80^0$ 13' 20.04" E |
| $8^0$ 8' 22.08"N | $80^0$ 13' 18.37" E |
| $8^0$ 8' 27.38"N | $80^0$ 13' 16.36" E |

20. தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் லுனுகம்வெகர பிரதேச செயலாளர் பிரிவில் துடுகெமுனுபுர இல 71 கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஜனசவிகம கிராமத்தில் கலபிடகல தொல்பொருள் இடமாக அழைக்கப்படும் குகையுடன் கூடிய கற்குன்று மற்றும் அதனைச் சூழ நாற்புறமும் 30 மீட்டர் அளவிலான நிலமனை. (வடக்கு அகலாங்கு 6° 34' 97.7" N மற்றும் கிழக்கு நெட்டாங்கு 81° 26' 95.4"E )

EOG 09-0122